ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை

பரிதாபி
பங்குனி

April
1973



தொகுதி 35
பகுதி 4

Vol. 35
No 4

ஆசிரியர் & பிரசுரகர்த்தா

வைத்ய T. S. ஈச்வரன், L. I M.

நாட்டு வைத்தியர்களிடம் ஒரு கோரிக்கை ... 61

புற்று நோய் ... 64

Our Task Ahead ... 69

குப்தயோகஸங்க்ரஹம் ... 74

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

காரியாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

# வைத்யரத்னம் P. S. வாரியருடைய
# ஆர்ய வைத்தியசாலா
## கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered THE ARYA VAIDYA SALA KOTTAKAL Trade Mark.

தலைமை ஆபீஸ் போன்: கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31
நர்ஸிங்ஹோம் போன் நெ. 44
தலைமை வைத்யர் போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி (வீடு) போன் நெ 27
(ஆபீஸ்) போன் நெ 61
மானேஜர் (வீடு) போன் நெ. 26

**சென்னை கிளை:**

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

**மற்ற கிளைகள்:**

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற
ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

**மானேஜிங் டிரஸ்டி.**
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
## பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1939)

**விற்பனை அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்**

31-A, சின்னகடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி-2.
போன் எண் : 4202

---

## சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பத்திமூன்று ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

பிரஸவித்த மாதர்கட்கு:

### ஸௌபாக்கிய ரஸாயனம்

ஜீர்ண சக்தி, ரத்தவிருத்தி அளிக்கும் சிறந்த லேஹியம்,
300 கிராம் பாட்டில் ரூ. 5.

### பயஸ்யா

தாய்ப்பாலை வளர்க்கும் திவ்ய ரஸாயன லேஹியம்.
300 கிராம் பாட்டில் ரூ. 5-50

— தபால் செலவு தனி —

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில்
தயாரிக்கப்பெற்ற
மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும்
இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.
மானேஜிங் டைரெக்டர்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON, GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

# M|s. Kalia Brothers (Regd.)

**Wholesale Musk & Indian Drugs Merchants,**

JULLUNDUR CITY (PUNJAB)

**Gram : KALIA**

Phone : **Office - 3232**
**Resi. - 4343**

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,

கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

# கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,

ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்).

தந்தி : **KALIA**

போன் : ஆபீஸ் – 3232
வீடு – 4343

தந்தி : " அம்ருதம் "    P, B. No. 1382.    போன் : 26006

# தி ஆர்ய வைத்திய பார்மஸி

## (கோயமுத்தூர்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD
AVP

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்**

எங்களுடைய கிளைகள் :

| | | |
|---|---|---|
| 1. | 23-B, பூஸா ரோடு, புது டில்லி-5 | போன் : 585687 |
| 2. | மொய்தீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 | ,, 2984 |
| 3. | கௌடியா மடத்தெரு மதராஸ்-14 | ,, 85752 |
| 4. | வளிஞ்ஞம்பலம், எர்ணாகுளம், கொச்சின் 16 | ,, 32336 |
| 5. | பிள்ளையார் கோயில் ரோடு, கண்ணனூர்-1 | ,, 92 |
| 6 | மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 | ,, 195 |
| 7. | கடைவீதி பொன்னானி | ,, 41 |
| 8. | ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1. | ,, 378 |
| 9. | கோர்ட் ரோடு, ஆலத்தூர் | ,, 87 |
| 10 | மெயின் ரோடு, கஞ்சிக்கோடு | |
| 11. | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில். கோயமுத்தூர்-18 | 33758 |
| 12. | இந்திரா பில்டிங் கள்ளிக்கோட்டை-2 | ,, 4891 |
| 13 | T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2 | 842 |
| 14. | No 263, 64. 11 வார்டு. மெயின் ரோடு. எடப்பாள் (பொன்னானி) | 31 |
| 15. | ஹல்வா பஜார் ரோடு, கள்ளிக்கோட்டை-1 | |

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங் ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் ; 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராம வாரியார்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

## வாரியர்

# க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும், மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்துவந்தால் வாத ரோகங்களும் விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00 12 ML. ரூ. 3-75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனுபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது].




ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை

| | | |
|---|---|---|
| தொகுதி 36 | பரிதாபி பங்குனி | பகுதி 4 |
| Vol. 36 | 1973 ஏப்ரல் | No. 4 |


श्री धन्वन्तरये नमः

## நாட்டு வைத்யர்களிடம் ஒரு கோரிக்கை

---

இன்று நாட்டு வைத்திய முறைகளான சித்த வைத்தியத்திற்கும் ஆயுர்வேத வைத்தியத்திற்கும் முறைப்படி கல்வி பயிலவும் தொழில் தேர்ச்சிபெறவும் வசதிகள் வாய்த்துள்ளன, தமிழ்நாட்டில் ஸ்ரீ வெங்கடரமண ஆயுர்வேதக்கல்லூரி தவிர வேறு கல்லூரி ஆயுர்வேதத்திற்குக் கிடையாது. அங்கும் கல்வி பெறும் வாய்ப்புகள் குறைந்து வருகின்றன. சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆயுர்வேத சிரோமணிப் பிரிவிற்குப் போதனை வழங்கும் அந்தக் கல்லூரி ஸம்ஸ்கிருதத்தில் பரிசயம் பெற்ற மாணவனை எதிர்பார்த்து நிற்க வேண்டியிருக்கிறது. உயர்நிலைப் பள்ளி நிலையில் ஸம்ஸ்கிருத போதனை மறைந்து விட்டபடியால் தொடர்ந்து பியூஸியிலும் ஸம்ஸ்கிருதம் எடுத்துக்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவு இந்நிலையில் சிரோமணி படிக்க ஸம்ஸ்கிருத எண்டிரன்ஸ் பரீக்ஷை தேறியவரோ ஸம்ஸ்கிருதத்தைப் படித்த இதரப்பள்ளி மாணவனோ கிடைக்காதபோது தக்கத் தகுதியுள்ள மாணவர் தொகை குறைந்து வருவதும் அங்குள்ள சூழ்நிலையில் இதைச் சமாளிக்கும் ஆர்வமின்மையும் காரணமாகத் தமிழ்நாட்டில் ஆயுர்வேதக்கல்வி

வாய்ப்பு மிகக் குறைந்து விட்டது மிகவும் வருந்தத்தக்கதே. ஆனாலும் அண்டை ராஜ்யங்களில் ஆயுர்வேதக்கல்லூரிகள் இருப்பதால் நல்ல ஸ்தாபனங்களில் ஆயுர்வேதக் கல்வி கற்றுத் தேர்ந்தவர்கள் தமிழ்நாட்டில் தொழில் புரிய முன்வரும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

சித்த வைத்தியத்திற்கு இதற்கு முன்னர் குருகுலமுறை ஒன்றைத் தவிர வேறு கல்வி நிலையம் இல்லாத பெருங் குறையைப் பாளையங்கோட்டை அரசினர் கல்லூரி பெருமளவு மாற்றிவிட்டது. நல்ல ஸ்தாபனத்தில் கல்வி பயின்று தேர்ந்த வைத்யர்கள் தொழில் புரிய ஆங்காங்கு சித்த மருத்துவசாலை களும் அரசினர் பொறுப்பில் நடைபெறுகின்றன. ஆகவே இதன் வருங்காலமும் நல்ல எதிர்பார்வைக்குள்ளாகலாம்.

இப்படிக் கல்லூரிகளில் படித்து நன்கு தொழிற்பயிற்சி பெற்றவர்களால் தான் ஆயுர்வேதமோ சித்தமோ மக்களிடம் நிலைத்து நிற்க முடியும். இன்றைய குருகுலமுறை வெறும் கண் துடைப்புதான். ஆக குருகுலமுறை ரீதியில் பயின்றவர்கள், பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என வைத்தியர்கள் பதிவு செய்து கொள்ளுமுறை இனியும் தொடர்வது மக்களின் நம்பிக்கையையும் மருத்துவங்களின் நற்பெயரையும் அழித்துவிடக்கூடும். அறிவு முதிர்ச்சிபெற்றுவரும் சமுதாயத்திடம் இந்தப் பரம்பரை – குரு குலப் பேச்சு எடுபடாது. நாளொருமேனியாக வளர்ந்துவரும் விஞ்ஞானம் நவீன வைத்யமுறையைப் பல துறைகளில் வளர்த்து வருகிறது. அதிலும் ஏதேனும் குறைகள் இருக்கக்கூடும். ஆனால் அதன் தாயான விஞ்ஞானம் அதையும் மாற்றிக்கொடுக்கக்கூடும். சித்தமோ ஆயுர்வேதமோ இன்று தனது பழம் பெருமை என்ற ஒன்றின் பலத்தையே சார்ந்து நிற்கின்றது. நல்ல விஞ்ஞான அடிப்படையில் ஆராய்ச்சி செய்யவோ, வழக்கற்று நிற்கும் பல துறைகளில் அதை விரித்து வளர்க்கவோ நல்ல கல்வி தேர்ச்சி பெற்றவர்கள் பெருகுவது அவசியம். ஆயிரம் வைத்ய மாணவர் களில் ஒரிருவர் தான் ஆராய்ச்சிக்கான திறமை பெற்றிருப்பர். ஆக வைத்யக் கல்லூரிகள் அதிகமாகி மாணவர் தொகை பெரு கினால் தான் சித்த ஆயுர்வேத முறைகள் பெருக வாய்ப்புண்டு. பெயரளவில் ஆயுர்வேத வைத்தியர் சித்த வைத்தியர் என்று பதிவு செய்துகொண்டு நாட்டுப்புற மக்களை ஊசி – மாத்திரை களால் மயக்கிப் பிழைப்பை நடத்துபவர்கள் பெருக இன்றையப் பதிவுமுறை வாய்ப்பளிக்கிறது. மக்களுக்கு இதனால் நேரும் கேடுகளைப்பற்றி யோசிப்பதுடன் பெயரளவில் விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கும் சித்த – ஆயுர்வேத முறைகளின் பெயர் எந்த அளவு பாதிக்கப்பெறும் என்பதில் அதிகம் கவனம் தேவை.

நாட்டு வைத்திய முறையை அரசாங்கம் அழித்துவிட்டது என்று குறைகூறி வந்த காலம் மறைந்து விட்டது. அரசாங்கத்தின் உதவி கிடைக்குமளவிற்குக் கூட அதைப் பயன்படுத்தத் தவறி, நாட்டுவைத்திய முறைகளைக் குழிதோண்டிப் புதைத்த அவப்பெயர் இன்று நாட்டு வைத்தியர்களை அடையக் காத்துக் கொண்டிருக்கிறது. இதிலிருந்து மீள ஒரே வழி மக்களுக்குள்ள அஞ்ஞானத்தைப் பயன்படுத்தி ஊசி போடும் மனப்பான்மையை மாற்றிக்கொள்வதும், தீரனாக நின்று நாட்டு வைத்ய முறைகளை ஒழுங்காகப் பயன்படுத்தி மக்களிடையே நல்லெண்ணத்தை வளர்ப்பதும், கல்லூரி வசதிகளைப் பெருக்கப் பாடுபடுவதும், அப்படி தக்க ஸ்தாபனங்களின் மூலம் கல்விகற்றே வைத்யத் தொழில் புரியும் ஸமுதாயத்திற்குத் தக்க இடமளித்துப் போலி வைத்தியர்கள் மறையச் சட்டதிட்டங்களை நன்கு அமைத்துக் கொள்வதும் தான் இன்றையத் தேவை, வைத்ய சமூகத் தலைவர்கள் இதற்கான ஏற்பாடுகளில் தீவிரமாக ஈடுபடும் அக்காலம் சமீபத்தில் உள்ளதா? நாமே நம்மை அழித்துக்கொள்ளும் அவலம் மாறுமா? சமுதாயம் நம்மை அவமதிக்குமளவு நம்மைத் தாழ்த்திக்கொள்ளும் தாற்காலிக லாபநோக்கு மனப்பான்மை நம்மைவிட்டகலுமா? சற்று தீவிரமாகச் சிந்தியுங்கள்.

---


# நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

# புற்று நோய்

வைத்ய V. S. பஞ்சநத சர்மா, திருச்சி

(சென்ற இதழின் தொடர்ச்சி)

முறைகேடான ஆகாரங்களாலும், கார்யங்களாலும் கான்ஸர் உண்டாகும் விதத்தை விளக்குவோம்.

கொதிக்கக் – கொதிக்கப் பானங்கள் குடிப்பது, அதிக கார மான பதார்த்தங்கள் உட்கொள்ளுதல், இவைகளால் வயிறு, குடல் இவைகளில் வேக்காளம் உண்டாகி, புண் உண்டாகிறது. இதையும் அசட்டை செய்து, மேலும், மேலும் தவருன உணவு களையே உட்கொள்ளுவதால், புண் அதிகமாகி, புற்று நிலையை அடையலாம். வனஸ்பதி போன்ற கலப்படமான பதார்த்தங்களை உபயோகிப்பதால் கல்லீரல் மண்ணீரல் வயிறு, குடல் இவை களில் விஷாம்சம் அதிகரித்து, வேக்காளம் உண்டாகி, புற்று நோய் உண்டாகும்.

புகையிலை, பீடி, சிகரெட் போன்ற அவச்யமற்ற லாகிரி வஸ்துக்கள் உபயோகிப்பதால், உதடு, பல் எகிறு, கடைவாய், தொண்டை, சுவாசகோசம் போன்றவைகளில் வேக்காளம் உண்டாகி, நாளடைவில் புற்று ஆகலாம்.

இக் காலத்தில், கர்பத்தடைக்கு உபயோகிக்கும் லூப், அடிக் கடி கருச்சிதைவு செய்து கொள்வது, அளவுக்கு மீறி சேர்க்கை ஆகியவைகள், கர்ப்பப்பை சம்பந்தமான புற்றை உண்டாக்கி விடக்கூடும். ஆக ஒவ்வொரு ஸ்தானத்தை அநுசரித்து, இந் நோய் உண்டாவதற்கு நேரிடையான ஒவ்வொரு தனிப்பட்ட காரணத்தை மேல்நாட்டு வைத்ய நூல்களில் காண்கிறோம். இதுபோல் ஒவ்வொரு தேசத்தை அனுசரித்து, இவ்வியாதி பாகு பாடுடையது எனவும் கூறுகிறார்கள்.

மேல்தோல், உதடு இவைகளில் உண்டாகும் புற்று தக்ஷிண ரூஸ்தேசத்தில் அதிகம் காண்கிறது. கல்லீரல் சம்பந்தப்பட்ட கான்ஸர் ஆப்பிரிக்காவில் உள்ள பாண்டு – ஜாதி மனிதர்க ளிடமும், ஈரோப் – வட அமெரிக்காவிலும் அதிகம் காண்கிறது.

வயிற்றில் உண்டாகும் கான்ஸர், ஐஸ்லண்ட் ஜப்பான் இந்த தேசங்களில் காண்கிறது. ஸ்தனங்களில் உண்டாகுவது இஸ்ரேல் பெண்களிடம் அதிகம் காண்கிறது.

கர்ப்பப் பையில் உண்டாகுவது பாரதப் பெண்களிடம் அதிகம் காண்கிறது.

சுவாசகோச கான்ஸர் இங்கிலாந்து வெல்ஸ் தேசங்களில் அதிகம் காண்கிறது.

பல் எகிறுகள், தொண்டைகளில் பாரத தேசத்தில் அதிகம் காண்கிறது.

சுவாசகோச சம்பந்தப்பட்டது மற்றவைகளைவிட அதிக சீக்கிரத்தில் உயிரைக் குடிக்கும் என்றும், இந்த சுவாசகோசப் புற்றுக்கு முக்கிய காரணம், பீடி, சிகரெட், சுருட்டு போன்றவைகளே என்றும் பல நீண்டகாலத்திய ஆராய்ச்சிகளுக்குப் பின்பு மேல்நாட்டு விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். பீடி, சிகரெட், சுருட்டு இவைகளின் உபயோகத்தால் Nicotin, Prucic, Acid, Fareenic–Colidin, Benzapyrin, Carbolic–Acid போன்ற விஷப்பொருள்கள் அதிகம் உடலில் சேரக்கூடும் எனவும் உலக ஆரோக்கிய ஆராய்ச்சிசாலையில் உள்ள விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

புகையிலையின் சாராம்சத்தை-எஸிடோன் என்ற திரவத்தில் கலந்து வைத்துக்கொண்டு, Crotan Oil நேர்வாள எண்ணையுடன் சேர்த்து, பல நல்ல ஆரோக்கியமான எலிகளின் உடலில் நான் கைந்து முறைகள் தடவிப் பார்த்ததில், Carcinoma என்ற புற்று நோய் வரக்கண்டார்கள். விசேஷமாக மணிப்பூரில் உண்டாகும் புகையிலைக்கு, இவ்வியாதி உண்டாக்கும் குணம் அதிகம் என்று கருதுகிறார்கள். புப்புஸத்தில் (Lungs) உண்டாகும் புற்று நோய்க்குப் புகையிலை எவ்விதம் காரணம் ஆகிறது என்பதை ஆராய்ந்ததில் கீழ்க்கண்ட கருத்து புலப்பட்டது. வாய் வழியாக இழுக்கப்படும் பீடி சிகெரட், சுருட்டு இவைகளின் புகைகள், சுவாசகோசங்களின் உள்ளே அமைந்துள்ள வாயு கோசங்களில் பரவி, அவைகளின் மிருதுவான ஜவ்வுகளில் வரட்சியையும், தடிப்பையும் உண்டாக்குகின்றது. இதன் காரணமாக சுருங்கி, விரியும் தன்மையை அக்கோஷங்கள் இழந்து வெடித்துக்கொள்கின்றன. பின்னர் வாயு கோஷங்களில் அமைந்துள்ள- சிறு சிறு ரத்த நாளங்களில் இப்புகை பரவி, ரத்தத்தில் விஷம் கலப்பதுடன்,

அவைகளையும் கடினமாக்கி, நாளடைவில் பெரிய ரத்த நாளங்களையும் (Pulmonary Veins: Pulmonary Artery) இவைகளையும் கடினமாக்குவதும், ரத்தம் சரிவர சுவாசகோசத்துக்குச் செலுத்த ஹிருதயத்துக்கு வேலை அதிகமாகிறது, உடலுக்கு முக்கியமான பாகமான ஹிருதயத்தைப் பாதிப்பதால் புப்புஸ கான்ஸர் மிகவும் பயங்கரமானது எனலாம்.

சிகரட்டின் புகையால் உண்டாகும் (Carbonmono Oxide) என்ற விஷப்பொருள், சிகப்பு ரத்த அணுக்க (R. B. C.) ளுடன் கலந்து, அவைகளின் பிராணவாயு வகிக்கும் தன்மையைக் கெடுத்து விடுகிறது.

ஆண்களுடைய ஹார்மோன்ஸ், Prostate Gland-ல் ஏற்படும் கான்ஸருக்கும் பெண்ணுடைய ஹார்மோன்ஸ், ஸதனங்களிலும், ஜனனேந்திரியங்களிலும் ஏற்படும் கான்ஸருக்கும், காரணமென சில விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். கோஷங்கள் உயிருடன் இருந்து இயங்கப் போதிய பிராணவாயு (Oxygen) கிடைக்காததால் அவைகள் உருவத்தில் பெருத்துக் கட்டியாக மாறுபட்டு கடைசியில் புற்று நோயாக ஆகிறது என்பது சில விஞ்ஞானிகள் கூற்று.

இதுவரை பல மேதாவிகளின் ஆராய்ச்சிகள் வாயிலாக பல அவயவங்களில் பல பெயர்களுடன் இவ் வியாதி குறிப்பிடப் பட்டாலும் முதலில் ஸாத்யம், அஸாத்யம், ஸௌம்யம், தீவிரம் என இரு வகையில் பிரித்து, ஸாத்யமான நோயை Benign என்றும், அஸாத்தியமான நோயை Malignant என்றும், குறிப்பிடப்பட்டது. ஆனால் விசேஷமாக கான்ஸர் என்ற சொல், அஸாத்யமான க்ரூரமான இந்நோய் பிரிவைத்தான் குறிப்பிடுகிறார்கள்.

இந்நோயின் கடுமை, பரவும் சக்தி, உருவம் முதலியவைகளில் ஒவ்வொரு அவயவங்களை அனுசரித்து, ஒவ்வொருவிதமாக மாறுபாடுடையதால், அவைகளை விளக்குவதானது இக்கட்டுரை மேலும் நீளும் என்றமையால் எல்லாவற்றிற்கும் பொதுவான லக்ஷணங்களை இங்கு குறிப்பிடமுனைந்தேன்.

கோஷங்கள் உருவத்தில் பருப்பதால் அவ்விடங்களில் கனதி, குத்துவலி உடைந்த அக்கட்டிகளில் சிரங்கு, ஆறுமல், மூடாமல் இருப்பது, எரிச்சல், சீழ் வருவது அல்லது ரத்தப்பெருக்கு அக்கட்டிகளிலிருந்து வெளியேறுவது, பசியின்மை, ஆகாரம்

விழுங்குவதில் கஷ்டம், ஸ்வர பங்கம், உத்ஸாஹம் குன்றி இருப்பது, சில சமயம் வயிற்றுப்போக்கு மாறி, மாறி வருவது உடல் நாளுக்குநாள் இளைத்து வருவது போன்ற லக்ஷணங்கள் காண்கின்றன.

கான்ஸர் பரவும் விதம் : இவ்விஷயத்தில் பல அபிப்ராயங்கள் இருந்தாலும், முக்கியமாக சிலவைகளைக் கீழே குறிப்பிடுகிறோம். 1. தனிப்பட்ட ஸ்தானங்களில் உண்டாகும் கான்ஸர், கோஷங்கள் (Cells) Tissues இவைகள் உருவத்திலும், அளவிலும் பருப்பதால் உண்டாகலாம் 2. ஸ்வாஸக்குழாய், ஆகார மார்க்கங்கள் போன்ற இயற்கைக் குழாய் மூலமாகப் பரவுகிறது. 3. ரத்த நாளங்கள் வழியாகப் பரவுகிறது. 4. லஸீகா வாஹினி, வழியாகப் பரவுகிறது.

புற்று நோயைக் கண்டுபிடிக்கும் முறை: அவயவங்களில் உள்ள, கண்களுக்குத் தெரியாத T. B, Gastric & Duodenal ulcer போன்றவைகளை X-Ray போன்ற சாதனங்களால் தெரிந்து கொள்வதுபோல், இவ்வியாதியைத் தெரிந்துகொள்ள முடியாது. இதற்கு Biopsy என்ற முறை கையாளப்படுகின்றது. இவ்வியாதி உள்ள இடத்திலிருந்து, சிறிது மாம்சத்தை எடுத்து, அதை ரசாயன Biopsy முறைப்படி பரீக்ஷை செய்து கண்டுபிடிக்கப்படுகிறது. இதைவிட மேன்மையாக Cytology பரிசோதனையை இக்கால விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். பல கோஷங்களின் (Cells) சேர்க்கைகள் Tissue எனப்பெயர். முக்கியமான கோஷத்தின் பரிசோதனை Cytology எனக் கூறப்படுகிறது. இதைத்தவிர Electrone Microscope மின் விசையில் இயங்கும் அணுதர்சன மூலமும், நோயின் அணுக்களைத் தெரிந்து கொள்கிறார்கள்.

இதுபோல் இந்நோயைப் பல ஆராய்ச்சிகள் செய்தும், மேலும் மேலும் முடிவடையாமல் இன்னமும் ஆராய்ச்சியில் தான் இருக்கிறது.

ஸாத்ய அஸாத்ய புற்று நோய்களில் மேலைய நாட்டு விஞ்ஞானி கருத்துக்களாவன :

ஸாத்யமான இக்கட்டியானது ஒரே இடத்தில் த்ருடமாக ஆச்ரயித்து இருக்குமே அல்லாது, மற்ற கோஷங்களைக் கெடுப்பதில்லை. ஆனால் கோஷங்களில் ஒரு அழுத்தத்தினைக் கொடுக்கும். உடலின் இயற்கை ஆரோக்கியத்தைக் கெடுக்காது. அக்கட்டியை சஸ்த்திர சிகித்ஸை மூலம் அகற்றினாலும், அவ்விடத்தில் மறுபடியும் அந்நோய் கிளைக்காது.

அஸாத்தியமான இவ்வியாதியானது முதலில் ஏதாவது ஒரு இடத்தில் உண்டாகி நாளடைவில் கோஷங்களில் பரவி, மற்ருெரு கட்டியை உண்டாக்கி, உடலின் இயற்கை ஆரோக்கியத்தைக் கெடுக்கிறது. அக்கட்டியை சஸ்திர சிகித்ஸை மூலம் அகற்றினுல் மேலும் அதிகமாகுமே யொழிய, குறைவதில்லை.

புற்று நோய் சிகித்சை: இந்நோயில் சஸ்திர சிகித்சை (Surgery)யை முதன்மையாகக் கருதினுர்கள். நாளடைவில் இம் முறையில் நோயாளிகளுக்கு இந்நோய் அதிகமாவதுடன், பற்பல உபத்திரவங்களால், நரக வேதனையை உண்டாக்கி, வெகு சீக்கிரத்தில் மரணத்தைக் கொடுப்பதால், இம்முறையைக் கைவிட்டார்கள். பின்பு பிரான்ஸ் தேசத்திய விஞ்ஞானி டாக்டர் மதாய்க்யூரி என்பவரின் ஆராய்ச்சியால் ரேடியம் (Radium) கிரணங்களின் வாயிலாக சிகித்ஸை செய்ய முனைந்தார்கள். ரேடியம் கிரணங்களின் உஷ்ணத்தால், நோய்வாய்ப்பட்ட இடமானது, வரட்சியாகி, வெடித்து, அவ்விடத்திலிருந்து உண்டாகும் ரக்தப்பெருக்கை நிறுத்த முடியாமலும், வியாதி அதிகமாகி நோயாளிகள் மரணத்தை அடைய ஆரம்பித்தார்கள். அடுத்த படியாக, Cobalt–Rays என்ற கிரண சிகித்சை செய்ய ஆரம்பித்து, அதிலும் ஓரளவுதான் வெற்றியடைந்தார்கள்

Nutrone, Javabrin என்ற ரசாயனப் பொருள்களால் மூன்ரும் சிகித்ஸை செய்யப்படுகிறது.

ஆக புற்றுள்ள இடத்தில் ரேடியம் கிரண சிகித்சை, பின் சஸ்திர சிகித்சை, மறுபடியும் ரேடியம் சிகித்சை கடைசியில் Cobalt - Ray சிகித்ஸை இவைகளைத் தவிர ரசாயன சிகித்ஸை என முறைப்படி கையாண்டு வரப்படுகிறது, இவைகளைத் தவிர ஆண்களின் ஹார்மோன்ஸ் (Male Harmons) பெண்களுக்கும், பெண்களின் ஹார்மோன்ஸ் ஆண்களுக்கும், மாற்றி உபயோகித்து சிகித்ஸை செய்கிருர்கள். Endoxin–Asta என்ற மருந்துகளையும் ஊசி மூலம் கொடுத்து வருகிருர்கள், இவ்வளவு இருந்தும் இந்நோய்வாய்ப்பட்டவர்களை, மரணத்தின் பிடியிலிருந்து விடுவிக்க முடியவில்லை. (தொடரும்)

---

தங்கள் 1974-ஆண்டு அங்கத்தினர் சந்தா ரூபாய் ஐந்தை உடன் அனுப்பக்கோருகிருேம்.

A. ராகவ ராவ்,

பொதுக்காரியதர்சி, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

சின்னக்கடைத்தெரு, திருச்சி-2.

# Our Task Ahead

Dr. Y. Kondal Rao, L.I.M.

## COMMEMORATION ADDRESS DELIVERED AT THE VENKATARAMANA AYURVEDA COLLEGE AND DISPENSARY ON THE OCCASION OF THE 67TH ANNIVERSARY AND THE FOUNDER'S DAY ON 24—3—1973

It is a pleasure to be associated with you on this occasion of the founder's day celebration.

At the outset I wish to start my address by quoting the illustrious son of the founder Sri K. Chandrasekara Iyer "it would need more powerful imagination to realise how in times of comparatively poor initiative and response to appeal, there could have existed men of rare vision and conspicuous ability to accomplish some of the most cherished objectives of Indians in the early period of their national regeneration'. Such was the personality of Sri V. Krishnaswamy Iyer, the founder of this Institution who had number of such growing foundations to his credit.

All his activities are dynamic in doing something not merely for our own benefits and that of those around us, but also for the good of those who shall come after us.

I wish to recount excerpts from his convocation address from Mahavagga to highlight his ideals.

"With brains enlarged and hearts expanded, with character more valuable than knowledge, one must wander forth for the gain of the many, the welfare of the many in compassion for the world". He was an embodiment of these lofty principles.

I am to quote from his valuable sayings to indicate that he is a person of perfection. "It is a thing of common experience whether in the learned professions or in the official or commercial line that the aspirant for success and future

advancement does not give to his calling the best of what is in him. Dilettante labour is foredoomed to failure. If you follow the lives of the great ones of this or any other land you will be impressed by the truth of the poets words. "No profit grows where is no pleasure taken". Study and work both in full measure adopted to your calling, in all its stages is the least price you have to pay for certain success. The time when all knowledge was one's province is a past which can never return. Master thoroughly the fraction of possible things which you have marked for your own".

So motivated Sri Krishnaswamy Iyer fulfilled many of his dreams in the short span of life of nearly forty nine years. He being a lawyer by profession imposed his unique stamp in the fields of Banking System, Economy of the Country, Education, Fine Arts, Industrial Associations, Legislation, Public Activities, Politics, Publication works, Philanthropy, Religion, Social work and so on.

In this phase this Venkataramana Ayurveda College and Dispensary and a sister institution, The Madras Sanskrit College are the outcome of the philanthropic attitude of that devoted soul.

The report necessitating this institution in the year 1905 states that "serious, systematic and scientific study of Hindu Medicine had become a thing of past. The feeble attempts that were made in this direction in South India are confined to the native states of Mysore and Travancore, and even there, they are in need of more liberal encouragement".

Generally that was the motive of all concerned with the development of this science throughout the early part of this century.

He visualised this foundation to be a Banian Tree to provide comforts to a large section of the population. In mass base organisation we must carry the conviction of every individual and schemes should pass through the usual procedures which may or may not fructify. Foreseeing these

difficulties in mass base, his legal acuman instituted it as a trust. This kind of administrative device has its own advantages. Expecially in the direction of carrying out expansion schemes, such a structure alone is helpful. With vision sufficient, such Trust can marshall things to surprising magnitude.

But for a man working in this field for considerable time and longing for the regeneration of the science in an appealing manner, it looks that the study and work both in full measure which Sri V. Krishnaswamy Iyer considers the least price one has to pay for certain success, have not played their role in perpetuation of such ideals. Monumental contributions right from Charaka, Susrutha and Vaghbata etc. till the medieval period are the testimonies of such study and work. It is only the contributions of such elite circle that can fulfil this intellectual job. They drew all relevant informations from various sources, studied them thoroughly, worked on them with utmost seriousness and contributed their own findings to enrich the science. This kind of feedback alone is the backbone for progress. Various treatises of ancient and modern times are being enriched by this method of feedback. As far as the science of Indian medicine is concerned there is no serious, systematic and scientific approach which the founder aimed at. It is stagnent from medieval time.

The institution, of which I am the Secretary, though succeeded in creating a little impression about these systems of medicines, it is not a point for complecency. The field that we have chosen is manufacturing of Indian Medicines and its vistas are wide open necessitating and permitting further improvement. It demands full time involvement in it. Coming under Drug Act, it warrants standardisation work right from the basic raw materials stage to consumer level. This is the case with a fraction of one of the Ashtangas that we have marked for our own. Such being the case this foundation being also a teaching institution choosing Ashtangas as a whole as its province, ought to have progressed much more.

Spectacular achievements of modern sciences are due to feedback by savents in respective fields. These savents are not created over night. It is a long drawn process like forming

a pearl in an oystershell. But it requires a promising precondition capable of producing such results.

So the alumini that pass out of institution should have such training that may raise them to the level of feeder back. It is with this idea all teaching institutions and industrial organisations should be keen on research and development. In the absence of such activity stagnation only results. Even to aim at such research and development activity, one should have fertile base to research on and proper personnel to do that job.

Regarding the fertility of this base there is no second opinion among well informed circles. It requires only proper interpretation and demonstration. Imagination, manipulation and perserverance are factors essential to accomplish them. These are not at all applied all these days or if applied not seriously, systematically or scientifically. Sproadic, ill-qualified and unqualified attempts in this direction have not only contributed nothing to the science but substantially to the personality. In the absence of concrete contribution, which alone is a perennial source for development, false claims die out with the individuals. The defect is in their built-in-mechanism which is not capable of visualising widely, conceiving clearly, manipulating perfectly and persuing it unceasingly. All these things are possible only by systematic education. So the system of Indian Medicine if at all withstood the test of time it is only because of its intrinsic merit. Nobody can claim a share in it. So there is sufficient proof to the fact that this science is a fertile field for study and research.

Being a science, it is essential to have more practical training along with theoretical classes. Graduates passing out should have confidence to face the realities in life. To achieve this object, various formulations are being tried from a very long time and the results are far from satisfaction. Career oriented education, over specialisation and craze for public status on one side and proclamation that last word has been said in ancient treatise on the other side, has resulted in recognising barefoot doctors for national health scheme today. The climate is so uncertain that it makes crystallisation impossible.

So the need of the hour is to demonstrate the ancient findings of this science, make the alumini understand, study and work on them and equip them with such unerring and unambiguous data that can be applied in similar conditions. Then they will be able to do this intellectual job and their findings will be additions to the originals. By this process even a few literary couplets of certain letters will be translated into practical laboratories, general and special treatment wards, manufacturing factories, investigation centres and so on. Confidence infused by such conditions make a graduate fit to face any problem in that field.

A few volumes of civil and criminal codes have created to-day a net work of judiciary and apex bodies only through such process of feeding back. It is the case with every branch of knowledge. So it should be in the case of Indian System of Medicine also But it is a collective task and not of an individual. I am ever ready with my humble co-operation this uphill task of noble character.

---

சென்னை வெங்கடரமண ஆயுர்வேதக் கல்லூரியின் ஸ்தாபகர் ஸ்ரீ V. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் இந்திய சுதந்திர சிற்பிகளாகத் திகழ்ந்தவர்களில் முக்கிய இடம் பெற்றவர். அவரது உதார மனமும் இடதுகை அறியாத வண்ணம் வலது கையால் அளித்த கொடையும் தீர்க்கதிருஷ்டியும் இன்றைய அநாகரிக மனப்பான்மைக்குப் புரியாத லக்ஷ்ய வாழ்வு வாழ்ந்தவரின் ஆத்மகுணங்கள். அவரது தீர்க்கதிருஷயும் கொடையும் மூலதனமாகக்கொண்ட ஸ்தாபனங்களில் ஸ்ரீ வெங்கடரமண ஆயுர்வேதக் கலாசாலையும் ஒன்று. இன்றுவரை அது நிலைத்திருப்பதும், என்றென்றும் நிலைத்திருக்கும் என்ற நம்பிக்கையை நமக்கு ஊட்டுவதும் ஸ்தாபகரின் நல்லெண்ணத்தில் அது தோற்றம் கொண்டமையால் இன்றைய சமுதாயம் அதை நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ளத் தவறிவிட்டது. ‘ஏதி ஜீவந்த மாநந்தோ நரம் வர்ஷசதாதபி’ – என்று ஆதி கவி கூறியதுபோல், ஆயுர் வேதத்தின் மறுமலர்ச்சிக்காக, தமிழ்நாட்டில் தனக்கு உரித்த ஸ்தானத்தைக் கட்டாயம் அது பெறும் என்று நம்புவோமாக.

— ஆசிரியர்.

# குப்தயோகஸங்க்ரஹம்

நூல்களாக அச்சேற்றப்பட்டு வெளிவந்துள்ளவைகளில் உள்ள மருந்து செய்முறைகள் இன்று கணக்கிடமுடியாதவை. அவைகளில் வெகு சில முறைகளே இன்று கையாளப்பெறுகின்றன. ஆங்காங்கு கைராசிமிக்க வைத்ய குடும்பங்களில் இன்று அந்தப் பரம்பரை தொடராததால் வைத்தியர்களின் கைக் குறிப்புகள் பல கவனிப்பாரற்றுக்கிடக்கின்றன. அவைகளைத் தொகுத்து ரோகவாரியாகவோ ஆஸவம் தைலம் பஸ்மம் என்று பிரித்தோ நூல் வடிவத்தில் அமைத்து வெளியிடுவதும் அவசியம் அந்த அளவு ஆராய்ச்சித்துறை வளரும்வரை அவை பாதுகாக்க பெறுமா என்பது சந்தேகமே. வைத்தியர்களின் மூலக் குறிப்புகளை வைத்திருக்கும் அந்தப் பரமபரையினரும் அதன் அருமையை அறியாமல் அவைகளை வீணடித்துவிடக்கூடும். இன்றளவில் அப்படி வீணன முறைகள் எத்தனை இருக்குமோ அறியோம். வைத்யகுடும்பங்களில் கவனிப்பாரற்றுக் கிடக்கும் அவைகளைச் சேகரித்து அவைகளில் உள்ளபடி இங்கு வெளியிடும் முயற்சியில் கிடைத்த சிறுகுறிப்புகள் வரிசையாகத் தொகுக்கப்பெறுகின்றன. இவைகளின் உபயோகத்தில் வைத்யர்கள் தமது பகுத்தறிவு பலத்துடன் இயங்கவேண்டும். இவை அவர்கள் குடும்ப சொத்தாகப் பாதுகாக்கப்பெற்றவை. அவைகளை வைத்ய சமூகத்திற்களித்த பெரியோர்களுக்கு நமது நன்றிகலந்த வணக்கங்கள். இன்று உபயோகத்திற்கு எளிதாகும்படி நவீன அளவில் இவை மாற்றி அமைக்கப்பெற்றுள்ளன. பெயரில்லாதவைகளுக்கு யுக்தியால் பெயரும் தரப்பட்டுள்ளன. — ஆசிரியர்

1 திருவிருதாஸவம் : செவதைவேர் பேய்க்கும்மட்டிக்காய் வெள்ளைக்காய்வேளை, கடுக்காய், தந்தீமூலம், இவை (5)வகைக்கு 30 கிராம், தசமூலம் 300 கிராம் (450 கிராம்) இவைகளை 12 லிட்டர் ஜலத்தில் காய்ச்சி 3 லிட்டர் கஷயமாகச் செய்து கொள்ளவும். அதில் பனைவெல்லம் (சுத்தமானது) $2\frac{1}{2}$ கிலோ, தேன் 1800கிராம் காட்டகத்திப்பூ 150 கிராம், கொட்டைதிராக்ஷை, கொடிவேலி வேர் பட்டை, வெள்ளைக்கா வேளை கடுக்காய்தோல், தான்றிக்காய் தோல், நெல்லிமுள்ளி, பேய்க்குமிழ், நேர்வாளவிதை (சுத்தி செய்தது) கடுகரோகிணி, ஏலக்காய் செவதை வேர் வகைக்கு 15 கிராம் இவைகளைப் பிரக்ஷேபமாக்கி ஆஸவ முறைப்படி தயாரித்துக்கொள்ளவும். வடிகட்டிய பிறகு குங்குமப்பூ 15 கிராம், பச்சைக் கற்பூரம் 15 கிராம் அரைத்துக்கலந்துகொள்ளவும்.

வேளைக்கு ½ 1 அவுன்ஸ் வீதம் இரவில் படுக்கும் முன்னரோ காலையிலோ சாப்பிட்டுவர மலபந்தம் விலகும். குடலில் ஏற்படும் வாயுக்கட்டு நீர்கட்டு விலகும். விஷதோஷம் வெளியாகி உடலில் சுறுசுறுப்பு ஏற்படும்.

2 சிக்ருபீஜாஸவம் : முருங்கைவிதை 600 கிராம், அமுக்கராக் கிழங்கு 600 கிராம் சோம்பு 600 கிராம், ஸப்ஜாவிதை 300 கிராம் இவைகளை இடித்துக்கொதிக்கும் வென்னீர் 6 லிட்டரில் இரண்டு நாள் ஊரவைத்து மூன்ரும்நாள் வடிகட்டி ஜலத்தைப்பிரித்து வைத்துக்கொள்ளவும். அந்த சரக்கில் மறுபடியும் 12 லிட்டர் ஜலம் ஊற்றி மூன்று லிட்டர் மீதமாகும்படி கஷயமாக்கிக்கொள்ள வும். இந்த கஷாயத்தையும் முன் வடிகட்டி வைத்துள்ள திரவத் தையும் சேர்த்து அதில் பின்னர் குறிப்பிடப்பட்டுள்ளபடி தயாரிக் கப்பெற்ற அயத்திரவம் 1 லிட்டர் அளவு சேர்த்து அதில் 3 கிலோ அளவு பனைவெல்லம் அல்லது பனங்கல்கண்டும் 1 கிலோ தேனும் சேர்த்து ஒரு மாதம் வைத்திருந்தபின் வடிகட்டி பச்சைக்கர்பூரம் 25 கிராம் நவச்சாரம் 25 கிராம் சேர்த்து வைத்துக் கொள்ளவும்.

அயத்திரவம் செய்யுமுறை: சுத்தமான இரும்பின் தூளை துணியில் வடிகட்டி சூட்சுமமாகச் செய்து 240 கிராம் எடுத்துக் கல்வத்திலிட்டு கருசலாங்கண்ணி சாற்றில் ஒரு நாளும் எலுமிச் சம்பழச்சாற்றில் ஒரு நாளுமாக மாற்றிமாற்றிப் பதினறு நாட்கள் அரைத்துப் பிறகு தினமும் 250 மிலி லிடர் ஜலம் விட்டு நான்கு மணி நேரம் அரைத்து மேல் தெளிந்து நிற்கும் திரவத்தைத் தனியே எடுத்து அளந்து கஷாயத்துடன் சேர்த்து வைத்துக் கொள்ளவும். இப்படி தினமும் 250 மிலி லிட்டர் ஜலம் விட்ட ரைத்து மேல் தெளிந்த திரவத்தை ஒரு லிட்டராகும்வரை அன்றன்று கஷாயத்துடன் சேர்த்துக்கொள்ளவும்.

ரக்தக்குறைவு, நரம்புத்தளர்ச்சி, பலவீன நிலைகளில் நல்ல ரஸாயனமாக உபயோகிக்கத்தக்கது. ½–1 அவுன்ஸ் அளவு தினம் இருமுறை உணவிற்குப்பின் சாப்பிடத்தக்கது.

---

குறிப்பு: இதன் தயாரிப்பு முறையில் சற்று கவனம் தேவை. ஆஸவத்திற்கான திரவம் தயாராகும் முன்னரே, 10 – 15 நாட்களுக்கு முன்னதாக அயத்திரவம் தயாரிக்க ஏற்பாடு செய்யவேண்டும். அயத்திரவத்தில் ஜலம் கலந்து ஆரம்பிக்கு முன்னர் கஷாயமும் ஊரல் திரவமும் தயாராகி வெல்லம் சேர்த்துக் கொள்ளவேண்டும். அன்றன்று அயத்திரவத்தை அதில் கலந்து கொள்ளவேண்டும் ஊரல் திரவம் வெல்லம் கலக்காமல் ஒரிரு நாளிருந்தாலும் புளித்துவிடும். இந்த இரண்டு முறைகளிலும் பனைவெல்லத்திற்குப் பதில் நல்ல தித்திப்புள்ள குழைவு ஜீனி அல்லது சர்க்கரை சேர்ப்பதும் நல்லதே.

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

**BHALLA BROTHERS (Regd.)**

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

***K. L. TALWAR & BROS.,***


MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

# இம்ப்காப்ஸ்

## புராதன பாரம்பரியத்துடன் நவீன தொழில் நுட்பமும் இணைந்து நிற்கும் நிறுவனம்.



இம்ப்காப்ஸ் இந்திய மருத்துவர்களின் இணையில்லாத ஒரு கூட்டுறவு நிறுவனம். புராதன நூலகளில் கூறியுள்ள முறைகள், தரங்களை கண்டிப்பான முறையில் பின்பற்றி ஆயுர்வேத, சித்த, யூனுனி மருநதுகளை அது தயாரித்து வருகிறது. மருந்துகளை தயாரிககும் ஒவ்வொரு கட்டத்திலும் அதிக கடுமையான முறையில் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. புராதன மருந்துகளை தயாரிப்பதில் நவீன பாக்கிங் முறைகளையும் இயந்திரங்களையும் இம்ப்காப்ஸ் பயன்படுத்தி வருகிறது. சுதேச மூலிகைள் பற்றிய இடைவிடாத ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இம்ப்காப்ஸ் புராதன இந்திய மருநதுகள் சம்பந்தமாக ஒரு மறு மலர்ச்சியை உண்டாககப பாடுபடுகிறது.

impcops

**உண்மையான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளுக்கு பெயர் பெற்ற நிறுவனம்**

இம்ப்காப்ஸ் மருந்துகள் எல்லா முக்கிய மருந்து கடைகளிலும் கிடைக்கும்

**இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.**

அடையார், சென்னை 20.

**விற்பனை நிலையங்கள்:** 4/86, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 8652

48, ஸொத் மாஸி தெரு, மதுரை. போன்: 30875

16, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.

maa/IMP/961/M TAM

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்டகால பரீக்ஷை அனுபவத்தினுல்

கண்டுபிடிக்கப்பட்ட கைகண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைகட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர்:

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர் (S. Ry.)


Edited and published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2
Printed at Githa Press, Tiruchirapalli-2.